 ISSN: 2454-3993

# "இலக்கு அடிப்படை முகாமைத்துவம்"

***யேசுஜயாடிலானி***
***உதவி விரிவுரையாளர்***
***கிழக்குப் பல்கலைக்கழகம்***
***இலங்கை***

இலக்கு அடிப்படை முகாமைத்துவ விஞ்ஞானமானது சர்வதேச ரீதியாக 'எம்பீஓ' (MBO) எனும் பதத்தினால் வழங்கப்படுகின்றது. இலக்கு அடிப்பபடை முகாமைத்துவம் எனும் பதம் முதன் முதலில் பீற்றர் ட்றக்கர் என்பவராலேயே 1954ஆம் ஆண்டு 'முகாமைத்துவச் செயற்பாடு' எனும் நூலில் கையாளப்பட்டது. "ஒரு தொழில் முயற்சிக்குத் தேவைப்படுவது முகாமைத்துவத் தத்துவமாகும். அம்முகாமைத்துவத் தத்துவம் தனியாளுக்கு நம்பிக்கைதரக் கூடியதாகவும், பொறுப்புக்களையளிக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். அதே நேரத்தில் ஒருபொதுத் திசையில் விளக்கமும், முயற்சியும் தரக்கூடியதாயுமிருத்தல் வேண்டும். குழு வேலையை ஸ்தாபித்தல் வேண்டும். பொது இலக்கும் தனிமனித இலக்கும் இசைவு பெறவேண்டும். இதனைச் செய்யக்கூடிய ஒரே தத்துவம் இலக்கு அடிப்படை முகாமைத்துவமாகும். இதனடிப்படையில் இத்தத்துவத்தில்,

1. தனி மனிதத் திறனும் பொறுப்புக்களும்
2. பொது இலக்கும் முயற்சியும்
3. குழுச் செயற்பாடு
4. பொது இலக்கினதும், தனி இலக்கினதும் இசைவு என்பனவற்றை ட்றக்கர் வலியுறுத்துகின்றார்.

இந்நான்கு கருத்துக்களும் வர்த்தக முயற்சிகளின் வெற்றிக்கு மட்டுமின்றிக் கல்விச் செயற்பாடுகளின் வெற்றிக்கும் அவசியமானவை.

இலக்கு அடிப்படையிலான முகாமைத்துவம் தொடர்பாக முதன்முதலில் முழு அளவிலான நூல் ஒன்றை எழுதிய ஜோர்ஜ் எஸ் ஓடியோன் MBO வைப்பின் வருமாறு வரையறைசெய்கின்றார். "இலக்கு அடிப்படை முகாமைத்துவ முறைமையானது ஒரு நிறுவனத்தின் மேல்மட்ட, உதவி முகாமையாளர் ஆகியோர் இணைந்து இதன் பொது இலக்கினை இனங்கண்டு, ஒவ்வொரு தனியாளிடமிருந்தும் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் தொடர்பான பொறுப்புக்களின் பிரதான பரப்பை வரையறை செய்வதுடன், நிறுவனத்தின் பிரிவுகளின் இயக்கத்திற்கு இலக்குகளை ஒரு வழிகாட்டியாக உபயோகிக்க வேண்டும். அத்துடன் அதன் அங்கத்தவர் ஒவ்வொருவரினதும் பங்களிப்பை மதிப்பீடு செய்யவும் வேண்டும்." இவ்வரை விலக்கணமானது பின்வரும் அம்சங்களுக்கு அழுத்தம் கொடுக்கின்றது.

1. இலக்குகளை வரையறை செய்வதில் கூட்டு முயற்சி
2. விளைவுவிடயத்தில் பொறுப்புக்களின் பரப்பு
3. பங்களிப்பை மதிப்பீடு செய்தல்

### MBO வினைப்பயன்படுத்துவதற்கான காரணங்கள்

1. முயற்சியின் நிலைப்பு
2. முயற்சியாளரின் திருப்தி
3. வாடிக்கையாளரின் திருப்தி
4. வளர்ச்சிக்கானநெறிகளைஅமைத்தல்
5. பணியாட்களின் திருப்தி
6. நிறுவனத்தின் தொழிநுட்பவிருத்தி
7. நிறுவனத்தின் சமூகப் பங்;களிப்பு
8. நிறுவனத்தின் இலாபஅடைவில் அதிகரிப்பு

**1. முயற்சியின் நிலைப்பு**

'எம்பீஓ' முகாமைத்துவத்தின் பணியென்னவெனில் ஒரு நிறுவனம் வளர, விரிவடைய, மாற்றமடையச் செய்வதேயல்லாமல் அது அழிந்தொழியச் செய்வதல்ல. 'எம்பீஓ' முகாமைத்துவத்தின் முதற்பணி ஒரு நிறுவனம் நிலைத்துச் செயற்படச் செய்வதாகும். முகாமைத்துவமானது நேரத்தையும், முயற்சியையும் முதலீடு செய்யவேண்டும். அது நிறுவனத்தின் நிலைபேற்றுக்கு வழிவகுக்கும். தனியாட்கள் மாற்றமடையலாம். ஆனால் நிறுவனம் தொடர்ந்து செயற்படும். இக்கருத்துக் கல்வி நிறுவனங்களைப் பொறுத்த மட்டிலும் பொருத்தமானது.

**2. முயற்சியாளரின் திருப்தி**

நிறுவனமானது தொடர்ந்து செயற்படுவதற்கு முயற்சியாளரின் திருப்தி அத்தியாவசியமானதாகும். நிறுவனத்தின் விருத்திக்காகத் தகுந்த முதலீடுகளை உள்ளீடுகளாக்கும் முயற்சியாளர் முதலில் தம் செயற்பாடுகள் குறித்துத் திருப்தியுற வேண்டியது அவசியமாகும். இவ்வாறான திருப்தி நிலையானது நிறுவனத்தின் செயற்பாடுகளை வினைத்திறனாகக் கொண்டு செல்வதற்கு வழிசமைக்கும்.

**3. வாடிக்கையாளரின் திருப்தி**

தொழில் முயற்சியின் பிரதான அம்சம் வாடிக்கையாளரது திருப்தியாகும். இது நிறுவனத்தின் நிலைபேற்றுக்கு வழிவகுக்கும். ஒரு நிறுவனத்தின் வாடிக்கையாளர் சிறந்த உற்பத்தியை அல்லது சேவையைப் பெறுவதற்கு உரிமையுடையவர்களாவர். திருப்தியடைந்த வாடிக்கையாளர் ஒருநிறுவனத்தின் சொத்துக்களெனலாம். கல்வித்துறையைப் பொறுத்தமட்டில் மாணவர், பெற்றோர், நலன் விரும்பிகள் ஆகியோர் பாடசாலைகளால் திருப்தி செய்யப்பட வேண்டியவர்களாவர்.

**4. வளர்ச்சிக்கான நெறிகளை அமைத்தல்**

'எம்பீஓ' முகாமைத்துவத்தில் நெறிபிறழ்தல் பொறுப்புணர்வானது முகாமையாளர்களது மிக முக்கிய கவனத்திற்குரியதாகும். இது திட்டங்களைத் தோற்றுவித்தல், தீர்மானஞ் செய்தல், மதிப்பிடல், கட்டுப்படுத்தல் ஆகிய கடமைகளை உள்ளடக்கியது. ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிக்கான நெறிப்படுத்தல் பணியானது, அந்நிறுவனம் எந்நிலையில் இருக்கின்றது என்ற சரியான அளவீட்டிலும், அது எங்கு செல்ல வேண்டும் என்ற அளவீட்டிலும் தங்கியுள்ளது. 'எம்பீஓ' வின் பயன்பாடானது ஒரு நிறுவனத்திற்கு முன்னேற்றகரமான நெறிகளைக் காட்டவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**5. பணியாட்களின் திருப்தி**

பணியாட்கொள்கையைத் தன்னகத்தே கொண்டிருத்தல் 'எம்பீஓ' முகாமைத்துவத்தின் ஓர் அம்சமாகும். இக்கொள்கை நிறுவனத்தின் கீழ்மட்டமிருந்து மேல்மட்டம் வரையுள்ள சகலபணியாளர்களுக்கும் திருப்தியளிக்கக் கூடியதாகவிருக்கும். வெகுமதியானது பண ரீதியாக மட்டுமின்றி புதியனவற்றைத் தோற்றுவிக்கும் சவால்கள், சிறந்த சாதனைகளுக்கு மதிப்பளித்தல், சுதந்திர உணர்வு, தீர்மானம் செய்தலில் பங்கேற்பதால் ஏற்படும் திருப்திபோன்றவற்றையும் கொண்டிருக்கின்றது. திருப்தியானது தொழிற்காப்புணர்வைப் பணியாட்களுக்குக் கொடுக்கின்றது. கல்விநிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் இது ஒருபிரதான தேவையாக உள்ளது.

**6. நிறுவனத்தின் தொழிநுட்பவிருத்தி**

'எம்பீஓ' முகாமைத்துவம் நிறுவனத்தின் தொழினுட்ப உயர்வுக்கு உதவுகின்றது. தொழில் நுட்பமானது விடயங்களைச் செய்வதற்கான வழிமுறை அறிவாகும். இது முறைசார் தகவல்களின் அமைப்பு. இத்தகவல்கள் எண்ணக்கருக்கள், தத்துவங்கள், செயற்பாடுகள், முறைகள், நுட்பங்கள் என்பனவற்றைக் கொண்டிருக்கும். இவை ஒரு நிறுவனமானது தனது உற்பத்திகள், சேவைகள் என்பனவற்றை விருத்தி செய்யப் பின்பற்றப்பட வேண்டியனவாகும். 'எம்பீஓ' முகாமைத்துவம், புத்தறிவு, புதுத்தகவல்கள் என்பனவற்றால் ஒரு நிறுவனத்தின் ஆற்றலை அதிகரிக்க வேண்டும். இப்பணியானது ஆராய்ச்சி, அபிவிருத்தி என்பனவற்றால் மேற்கொள்ளப்பட வேண்டும். கல்வி நிறுவனங்களின் தொழில் நுட்பங்கள் மாற்றமடைவதால் முகாமையாளர்கள் பொருத்தமானதொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தக் கூடியதாகவும் பின்பற்றக் கூடியதாகவுமிருத்தல் வேண்டும். 'எம்பீஓ' இவ்வம்சத்தின் விருத்திக்கு நெறியையும், சந்தர்ப்பங்களையும் தருகின்றது.

**7. நிறுவனத்தின் சமூகப் பங்களிப்பு**

'எம்பீஓ' முகாமைத்துவம் அடிக்கடி சமூகத்தின்பால் கவனம் செலுத்துகின்றது. கூட்டுறவு, பங்களிப்பு என்பன இதில் பிரதானமானவை. இத்தொடர்பு அபிவிருத்திக்கு வழிவகுக்கின்றது. விழுமியங்களின் பரப்பு, மக்கள் சேவைக்கொள்கை, வளங்கள் என்பனவற்றுக்கும் இது உதவுகின்றது. முகாமைத்துவத்தின் பணியானது தனியாகவோ, கூட்டாகவோ மற்றையோரை நற்பிரசைகளாக உருவாக்க உதவுகின்றது. எல்லாக் கல்விமுயற்சிகளிலும் இறுதிப்பயன் சமூகநலனாகும். இது கல்வி முயற்சியில் ஈடுபடுவோர் அனைவரும் உள்ளத்தில் கொள்ளவேண்டியதொன்று.

**8. நிறுவனத்தின் இலாபஅடைவில் அதிகரிப்பு**

இது 'எம்பீஓ' முகாமைத்துவத்தின் மிகப் பிரதானப் பணியாகும். இலாப அடைவு நிறுவனத்திற்கும் தனியாளுக்கும் உதவியாகின்றது. முதலீட்டாளர் நேரம், நிதி, திறன்கள் என்பனவற்றின் முதலீட்டுக்கு நியாயமான பிரதிவிளைவைப் பெற உரித்துடையவர்களாகின்றனர். 'எம்பீஓ' முகாமைத்துவமானது எல்லாச் சூழ்நிலைகளிலும், எல்லா நேரத்திலும் முதலீட்டாளர் தம் பிரதிவிளைவைப் பெறுவதை உறுதிப்படுத்துகின்றது. அன்றியும் 'எம்பீஓ' முகாமைத்துவமானது முதலீட்டாளர்கள் தம் நிறுவனம் பற்றியும், அதன் தனியாட்கள், உற்பத்தி, சேவை, அதன் முகாமை என்பன பற்றியும் பெருமிதங்கொள்வதையும் உறுதிப்படுத்துகின்றது. முதலீட்டாளர் திருப்தியானது, கல்வி நிறுவனங்களைப் பொறுத்தமட்டிலும் ஒருபிரதான தேவையாகக் காணப்படுகின்றது. இவ்வாறாக இலக்கு அடிப்படையாகக் கொண்ட முகாதைத்துவமானது பல்வேறு பிரிப்புகளையும் தேவைகளையும் அடிப்படையாகக் கொண்டு முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது.

**உசாத்துணை நூல்கள்**

1. சின்னத்தம்பி. மா, 2006, கல்வித்திட்டமிடல் கோட்பாடுகளும் புதியவளர்ச்சியும்.
2. செல்வராசா. மா, 1996, அபிவிருத்திக்கான முகாமைத்துவ சிந்தனைகளும் செயற்பாடுகளும், கல்வி முகாமைத்துவ அபி விருத்தி துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம
3. ஜெயராசா. சபா, 2009, கல்விநிர்வாகமும் முகாமைத்துவமும், சேமமடுபுத்தகசாலை, கொழும்பு.
4. கல்விமுகாமைத்துவம் - அலகு -1 ,கல்விபீடம் இடைநிலை, மூன்றாம் நிலைக் கல்வித்துறை பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்.